# திருவருகைக்காலம் 2ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

திருவருகைக்கால இரண்டாம் ஞாயிறுக்கு வந்துள்ளோம். இயேசுவே வாரும் என்று சொல்லி அழைக்கும் இக்காலத்தில், இந்த ஞாயிறு இயேசுவின் வருகையை அறிவித்த இறுதி இறைவாக்கினராக வந்த திருமுழுக்கு யோவானைப் பற்றி சிந்திக்க அழைக்கப்படுகின்றோம்.

அமைதியின் வாரம் என்றழைக்கப்படும் இந்த வாரத்தில் நீதியின் வழித் தான் அமைதிப் பிறக்கும் என்பதனை, இறைவாக்கினர்கள் வழியாக முன் அறிவிக்கப்படுகின்றது.

இன்று இத்தகைய அமைதி இல்லாத நிலையே நாடுகளிடையே பார்க்கின்றோம். எனவே நமது நாட்டிற்காகவும், அன்றைய நாடுகளுக்காகவும், போரினை சந்தித்து வரும் சிரியா போன்ற நாடுகளுக்காகவும் அதனை ஆளுவோருக்காகவும் மன்றாடுவோம். பக்தியுடனே பங்கேற்று பயன் பெற பாவங்களையேற்று மனம் வருந்தி இறை இரக்கத்தை இறைஞ்சுவோம்.

### மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. திருஅவையை ஆசீர்வதியும். அமைதியின் மன்னராகிய உம் ஆட்சியின் விழுமியங்களை உலகு சொல்லும் விதத்தில் வாழ்வை பணியை அமைத்துக் கொள்ள அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நாட்டை ஆளுவோருக்காக மன்றாடுகின்றோம். அமைதியை விதைக்கின்றவர்களாக செயல்பட்டு, எல்லா மக்களும் எல்லாம் பெற்று வாழும் நலம்விரும்பிகளாக வாழ அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. கடவுளின் மக்கள் என சொல்லும் நாங்கள், அமைதியையேற்படுத்துவதில் அக்கறை காட்டிட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. போர்களை சந்தித்து வரும் நாடுகளில் அமைதியின் ஆவியை தங்கச் செய்து மக்கள் நலமுடனே வாழ்ந்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com